Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 வைகாசி 05 வியாழக்கிழமை (18-05-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:149

# கைதடி, கொழும்புத்துறையில் விடுதலைப் புலிகள் தாக்குதல்!

## முறியடிக்கப்பட்டதாக அரசுத் தரப்பில் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,மே18

**கொழும்புத்துறை மற்றும் கைதடிப் பகுதிகளில் பாதுகாப்புப் படையினரின் நிலைகள் மீது நேற்று முன்தினம் இரவு விடுதலைப் புலிகள் தாக்குதல்களை நடத்தினர்.**

**விமானப்படை, பீரங்கிப்படை ஆகியவற்றின் உதவியுடன் தரைப்படையினர் இத்தாக்குதல்களை முறியடித்தனர் என்று இலங்கை வானொலி அறிவித்தது.**

நேற்று முன்தினம் வரையான வடக்கு இராணுவ நடவடிக்கைகள் குறித்து இலங்கை வானொலி மேலும் தெரிவித்ததாவது:-

பாதுகாப்பு நிலைகளுக்கு முன்னால் புலிகளின் 30 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

பூநகரியில் இருந்து கொழும்புத்துறைப் பக்கமாக புலிகள்வந்த 3 படகுகளை படையினர் தாக்கியழித்துள்ளனர்.

கைதடியில் புலிகளுக்குப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## அநாதரவான நிலையில் 100வயோதிபர்கள்

யாழ்ப்பாணம்,மே18

கைதடி வயோதிபர் மடத்தில் சுமார் 100 வயோதிபர்கள் பராமரிப்போர் இன்றிச் சிக்கிப்போய் இருப்பதாக ஒரு தகவல் நேற்றுத் தெரிவித்தது.

பராமரிப்புப் பணியில் ஈடுபட்டிருந்தோர் அங்கு இடம்பெற்ற மோதல்களை அடுத்து நேற்று நண்பகலுடன் அங்கிருந்து வெளியேறி விட்டதாகவும் அத்தகவல் தெரிவித்தது. (உ)

## பத்திரிகைகள் சஞ்சிகைகள் மீது நடவடிக்கை

கொழும்பு,மே18

பௌத்த மதத்தையும் அதன் கலாச்சாரத்தையும் இழிவுபடுத்தும் வகையில் புகைப்படங்கள் மற்றும் செய்திகளைவெளியிடும் பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளுக்கு எதிராகக் கடும்நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது. மேற்படி சட்டவிதிகளை மீறுவோர் பத்திரிகை தடைச்சட்ட விதிகளுக்கு அமைய தண்டிக்கப்படுவர் எனவும் -

அண்மைக் காலமாக பௌத்த மதத்தையும், அதன் கலாச்சாரத்தையும் இழிவுபடுத்தும் வகையில் பத்திரிகைகள் படங்களையும் செய்திகளையும் வெளியிட்டமையே இவ்வாறான நடவடிக்கைக்கு காரணமெனவும் அரசாங்கம் அறிவித்துள்ளது. (இ-7)

## ஆறாயிரம் கோடி ரூபாவுக்கு மேலும் 1,300 கோடி ரூபா ஆயுதக் கொள்வனவுக்கு!

கொழும்பு,மே18

இராணுவத்துக்காக தற்போது அவசரஅவசரமாக கொள்வனவு செய்யப்படும் ஆயுதங்களுக்காக மேலும் 17 கோடி 40 லட்சம் அமெரிக்க டொலர் தேவைப்படுவதாக வெளிவிவகார அமைச்சர் லக்ஷமன் கதிர்காமர் தெரிவித்திருக்கின்றார்.

நேற்று முன்தினம் கொழும்பில் தாம் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

இந்த ஆயுதக் கொள்வனவுக்காக எண்பது கோடி அமெரிக்க டொலர்(சுமார் 6 ஆயிரம் கோடி ரூபா) தேவைப்படுவதாக முதலில் அறிவிக்கப்பட்டிருந்தது. அதிலும்விட மேலும் 17 கோடி 40 லட்சம் அமெரிக்க டொலர் (சுமார் 1300 கோடி ரூபா) தேவைப்படுவதாகத் தற்போது தகவல் வெளியிடப்பட்டிருக்கின்றது. (உ)

## பாதுகாப்பு ஆலோசனை வழங்க இந்திய அதிகாரி வருகிறார்!

கொழும்பு,மே18

பாதுகாப்புச் சம்பந்தமாக இலங்கை அரசுக்கு ஆலோசனை வழங்க பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த கே.ரி.எஸ்.கில் என்பவரை இந்திய அரசு கொழும்புக்கு அனுப்ப இருப்பதாக 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருப்பதாக இலங்கை வானொலியின் பத்திரிகைக் கண்ணோட்டத்தில் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக கொழும்பில் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்துவதற்கு இவரின் ஆலோசனைகள் பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஓரிரு நாள்களில் கொழும்புக்கு வருவார் என எதிர்பார்க்கப்படும் கே.ரி.எஸ்.கில் பஞ்சாப் மாநில காவல் துறையின் முன்னாள் தலைமை இயக்குநர் ஆவார்.

அதேசமயம் கில்லின் உதவியை இலங்கை அரசு கோரியிருப்பதாக இந்திய வானொலி நேற்றிரவு தெரிவித்தது. (இ-9-4)

## அரச, திணைக்கள ஊழியர்களை ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும்போது கடமைக்குச் சமுகமளிக்கப் பணிப்பு

யாழ்ப்பாணம்,மே18

ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்படும் நேரங்களில் அரச செயலகம் மற்றும் திணைக்களங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் அனைவரும் கடமைக்குச் சமுகமளிக்க வேண்டும் என்று யாழ். அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் வலியுறுத்தியுள்ளார்.

நல்லூர் பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்ற அரச திணைக்களங்களின் தலைவர்களின் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஊரடங்குச் சட்டத்தைச் சாட்டாக வைத்து ஊழியர்கள் கடமைக்குச் சமுகமளிக்காமல் இருப்பது கவலைக்குரியதாகும். எனவே ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்படும் நேரத்திலாவது கடமைக்குச் சமுகமளிக்க வேண்டும்.

ஊரடங்கு அமுலில் இல்லாத பகுதிகளில் அலுவலகங்கள் தொடர்ந்தும் முழுநேரமும் செயற்பட வேண்டும். தங்களுக்குரிய கடமைகளையும் பொறுப்புக்களையும் ஊழியர்கள் உணர்ந்து செயற்படவேண்டும்.

சுகவீனம் அடைந்தவர்கள் மற்றும் கடமைக்கு வருகைதர முடியாதுள்ளவர்கள் தமது திணைக்களத்

(4ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாடு முழுவதும் ஊரடங்கு இன்று முழுநாளும் அமுலில்!

யாழ்ப்பாணம்,மே18

தீவுப்பகுதி அடங்கலாக குடாநாடு முழுவதும் இன்று வியாழக்கிழமை காலை 5 முணி முதல் ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்படுவதாக பலாலி இராணுவத் தலைமையகம் நேற்றிரவு அறிவித்தது. இந்த உத்தரவு தொடர்ந்து நாளை காலை 5 மணி வரை - 24 மணித்தியாலங்களுக்கு - அமுலில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## யுத்தச் செய்திகள் தவிர்ப்பு

யுத்தச் செய்திகளைக் கொழும்பில் உள்ள தகுதி வாய்ந்த அதிகாரியின்தணிக்கைக்கு அனுப்பி அனுமதி பெறுவதில் நெருக்கடி இருப்பதால் அந்தச் செய்திகள் இங்கு தவிர்க்கப்பட்டுள்ளன. (ஆ-ர்)

## தப்பியோடிய படையினர் மீண்டும் இணைய அழைப்பு
### காலக்கெடுவை அரசு நீடித்தது

கொழும்பு,மே18

இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்கள் மீண்டும் படையில் வந்து இணைவதற்கான கால எல்லை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்தக்கால எல்லைக்குள் தத்தமது படைப்பிரிவுகளிலோ அல்லது அருகில் உள்ள படைமுகாம்களிலோ இணைவோருக்கு எவ்விதமான தண்டனையும் வழங்கப்படமாட்டாது என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரிய அறிவித்துள்ளார். (ஐ-7)

## ரதோற்சவம் நிறுத்தப்பட்டது

வலி.வடக்கு,மே18

கொல்லங்கலட்டிப் பிள்ளையார் கோயிலில் நேற்றுக் காலை நடைபெறவிருந்த தேர்த்திருவிழா இறுதி நேரத்தில் கைவிடப்பட்டதுடன் நேற்றைய தினமே கொடியிறக்கத் திருவிழாவும் நடத்தப்பட்டு பக்தர்கள் அங்கிருந்து வெளியேறினர்.

நேற்றைய தினம் வசந்த மண்டபப் பூசை முடிந்து சுவாமி தேரில் ஆரோகணிப்பதற்காக வருகைதந்த போது ஆலயத்தை விட்டு பக்தர்களை வெளியேறக் கோரும் பணிப்புரை விடுக்கப்பட்டது.

இதனால் ரதோற்சவம் கைவிடப்பட்டது. இன்று நடைபெற வேண்டிய கொடியிறக்கத் திருவிழாவை நேற்றே நடத்திவிட்ட ஆலயக் குருக்கள், பக்தர்கள் உடனடியாக அங்கிருந்து வெளியேறினர்.

## இலங்கை நெருக்கடி குறித்து இந்தியா - போர்த்துக்கல் பேச்சு

புதுடில்லி,மே18

இலங்கையில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலை தொடர்பாக இந்திய வெளியுறவுச் செயலர் லலித் மான் சிங்கும் இந்தியாவில் உள்ள போர்த்துக்கல் நாட்டுத் தூதர் ஜோபோ சங்குவேரியாவும் நேற்று முன்தினம் புதுடில்லியில் பேச்சு நடத்தியுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத்துக்கு தற்போது தலைமை வகிக்கும் போத்துக்கல் இலங்கை விவகாரம் தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்திவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை -

இலங்கை நெருக்கடி தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியமும் இந்தியாவும் மீண்டும் பேச்சு நடத்த இருப்பதாக 'இந்து' பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கிறது.

இலங்கை விவகாரத்தில் பல நாடுகள் சம்பந்தப்பட்டால் இந்தப் பிரச்சினை மேலும் சிக்கலாகிவிடும் என்றும் அந்தப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

## இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அரசு மூன்று அணுகுமுறைகள்
### அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே18

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக அரசாங்கம் மூன்றுவகையிலான அணுகுமுறைகளை திட்டமிட்டு வருவதாக நீதி, அரசமைப்பு இனவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற பொதுவைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தும் வகையில் இராணுவரீதியான அணுகுமுறைகளைக் கடைப்பிடித்தல் மற்றும் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் அனைத்துக் கட்சிகளிடையேயும் கருத்து ஒற்றுமையை ஏற்படுத்தல், விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு மூன்றாம் தரப்பு நாடுகளின் உதவிகளை ஒருங்கிணைப்பது என்பனவே அந்த அணுகுமுறைகளாகும் என அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மேற்படி மூன்று அணுகு முறைகளும் சமகாலத்தில் முன்னெடுக்கப்படும் எனவும் அமைச்சர் தெரித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### தவறிவிட்டது

ஆ.தெய்வேந்திரம் என்பவரது உடுப்புக்கள் மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய உரப்பை நாச்சிமார்கோயிலடிக்கும் மானிப்பாய் அந்தோனியார் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டவர்கள் அம்பாள் களஞ்சியம், K.K.S. வீதி கொக்குவில் சந்தி எனும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

(76166)

### புறொயிலர் கோழிகள்

புறொயிலர் கோழிகள், மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. எல்லா நாள்களிலும் (ஊரடங்கு நேரத்திலும்) பெற்றுக்கொள்ளலாம். கட்டணமின்றி சுத்தம்செய்து தரப்படும். தொடர்பு: V.S., 227,பிறவுண் றோட் (கலட்டிச் சந்திக்கு 300 யார் யாழ்.நகர் பக்கம்), யாழ்ப்பாணம்.

(76102)

### யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி

# வவுனியா, மட்டக்களப்புக்கு தெரிவானோர் இங்கு விரிவுரைக்கு சமுகமளிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மே18

வவுனியா மற்றும் மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் தற்காலிகமாக யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரியில் விரிவுரைகளுக்கு சமுகமளிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்றும் -

இதற்காக சம்பந்தப்பட்ட சகல மாணவர்களையும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் தற்காலிகமாக இயங்கும் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் சமுகமளிக்குமாறும் - கல்லூரியின் பீடாதிபதி தி.கமலநாதன் கேட்டுள்ளார்.

மேற்படி மாணவர்களுக்கு விடுதி வசதிகள் செய்யப்பட்டுள் என என்றும் -

மாணவர்கள் தங்கவேண்டிய ஏற்பாடுகளுடனும் கல்விச் சான்றிதழ் மற்றும் அடையாள அட்டை ஆகியவற்றுடன் நாளை சமுகமளித்து விரிவுரைகளுக்குத் தோற்றலாம் என்றும் - பீடாதிபதி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இயங்கிய யாழ்.கல்வியியற்கல்லூரி நேற்று முதல் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இயங்க ஆரம்பித்தது. பெரும்பாலான மாணவர்கள் விரிவுரைகளுக்குச் சமுகமளித்தனர்.

(இ-7)

## நிவாரண விநியோகம்

பச்சிலைப்பள்ளி, பளை, மருதங்கேணி ஆகிய இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சிப் பகுதியில் தங்கியுள்ள 683 குடும்பங்களுக்கு இம்மாதத்துக்குரிய உலர்உணவு நிவாரணம் ப.நோ.கூ. சங்கக் கிளைகள் ஊடாக வழங்கப்பட்டுவருகின்றன.

அதேசமயம் -

இந்தப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ள 150 குடும்பங்களுக்கு யுனிசெவ், கெயர் ஆகிய நிறுவனங்கள் சமையல் பாத்திரங்களை வழங்கியுள்ளன.

(உ-3-109)

# இன நெருக்கடிக்குத் தீர்வுகாண சகலரும் உறுதிபூண வேண்டும்

## ஜனாதிபதி வெசாக் செய்தி

இன நெருக்கடியைத் தீர்த்து சமூகங்களிடையே நல்லெண்ணம் ஏற்பட சகலரும் உறுதி பூணவேண்டும்.

மேற்கண்டவாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

'வெசாக்' பண்டிகையை முன்னிட்டு விடுத்த விசேட அறிக்கை ஒன்றிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார். இரண்டு தசாப்தங்களாக எமது நாட்டில் நிலவி வரும் இன நெருக்கடியை தீர்த்து வைப்பதற்காக சகல இன மக்களது உள்ளங்களிலும் நல்லெண்ணம் உருவாக வேண்டும்

இவ்வாறான ஒரு சூழ்நிலையே இந்த நாட்டுக்கு நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்தித் தரும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

### கொழும்பில் பாதுகாப்பு தீவிரம்

வெசாக் பண்டிகையை முன்னிட்டு கொழும்பு நகரின் முக்கிய பகுதிகளில் தற்போது அமைக்கப்பட்டுள்ள பந்தல்களில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று மேல்மாகாண தெற்குப் பிரிவுக்கான பிரதிப் பொலீஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

(இ-7)

# உரிமையாளரைத் தாக்கி வீடு ஒன்றில் கொள்ளை

## இளவாலைப் பகுதியில் சம்பவம்

வலி.வடக்கு,மே18

நள்ளிரவுவேளை வீடுஒன்றில் புகுந்த திருடர் கோஷ்டி ஒன்று வீட்டு உரிமையாளர்களை பலமாகத் தாக்கிவிட்டு ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான நகைகளையும் ஒன்றரை லட்சம் ரூபா பணத்தையும் திருடிச்சென்றுள்ளது.

இளவாலை வைரவர் கோயிலடியில் நேற்று முன்தினம் நள்ளிரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

மேற்படி வீட்டில் வசித்த ஓய்வு பெற்ற கிராம சேவையாளரான எஸ். கனகசபை (வயது75) வலது கையில் பலமாகத் தாக்கப்பட்டு கை முறிந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை இவருடன் வசித்த அங்கவீனரான க.குமரேசபிள்ளை (வயது66) கத்தி வெட்டுக் காயங்களுக்கு இலக்கானார்.

(இ-7-86)

## தொடர்பு கொள்ளவும்

செல்வி கமலாம்பிகை கனகரட்ணம்
(சுகாதாரப் பகுதி, யா.மா.ச.) என்பவர்
திருமதி ப.பரமநாதன்
*தொலைபேசி இல.2541(கௌரி)*
(76164) என்பவருடன் தொடர்பு கொள்ளவும்.

# இலங்கையின் உள்விவகாரத்தில் வேறு எந்த நாடும் தலையிடமுடியாது

## பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சு அறிக்கை

சென்னை,மே18

இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் வேறு எந்த ஒரு நாடும் தலையிடமுடியாது.

மேற்கண்டவாறு பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிவினைவாதிகளுக்கு எதிரான இலங்கை அரசின் நடவடிக்கைகளுக்கு பாகிஸ்தான் முழு ஆதரவு வழங்கும் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா.சாசனத்தின் படியும் தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பின் கொள்கைகளுக்கு ஏற்பவும் ஒவ்வொரு நாடும் மற்றைய நாட்டின் இறைமையையும் ஒருமைப்பாட்டையும் மதிக்கக் கடமைப்பட்டுள்ளது - என்று அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-9)

## D.M.I மாணவர் கவனத்திற்கு
27.05.2000

* உங்கள் வகுப்புக்கள் வழமையான நேர அட்டவணைப்படி அன்று நடைபெறும்.
* இடம் பின்னர் அறிவிக்கப்படும்.

*- நிர்வாகி*

### ஜி.சீ.ஈ. உயர்தரப்பரீட்சைக்கு தயாராகும்

# மாணவர் கல்வியை பாதிக்காத விதத்தில் எதிர் காலத்தில் ஆசிரியர் இடமாற்றம்

## கல்வி அமைச்சர் பணிப்பு

கொழும்பு,மே18

எதிர்வரும் காலங்களில் ஆசிரியர் இடமாற்றங்களை மேற்கொள்ளும் போது, ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களின் கல்வியில் எந்தவிதப் பாதிப்பையும் ஏற்படுத்தாத வகையில் அவற்றை மேற்கொள்ளுமாறு கல்வி உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

ஆசிரியர் இடமாற்றங்களினால் மாணவர்களுக்கு ஏற்படும் சிரமங்கள் தொடர்பாக கல்வி அமைச்சுக்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதனை அடுத்து மேற்படி பணிப்புரை விடுக்கப்பட்டது.

மாற்றம் பெறும் ஆசிரியர்களை ஒகஸ்ட் மாதம் உயர்தரப் பரீட்சைகள் முடிவடையும் வரை இடமாற்றம் செய்ய வேண்டாம் என்றும் -

இத்தகைய இடமாற்றங்கள் நடைபெறுமானால் அதனைத் தற்காலிகமாக நிறுத்திவைக்க வேண்டும் என்றும் -

உயர் கல்வி ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படும்போது அதிபர்கள் அதுபற்றி அதிகாரிகளுக்கு அறிவிப்பது அவசியம் என்றும் - அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(இ-9)

### சிக்கன கடன் வழங்கு ஊழியருக்கு

யாழ்ப்பாணம்,மே18

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் வெளிக்கள ஊழியர்கள் உட்பட சகல அலுவலக ஊழியர்களையும் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு சமாச அலுவலகத்தில் சமுகமளிக்குமாறு பதில் மாவட்ட செயலாளர் கேட்டுள்ளார்.

(இ-6)

### சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,மே18

இனந்தெரியாத நபர்களினால் வெட்டப்பட்டு உயிரிழந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட ஒருவரின் சடலம் இரண்டு நாள்களின் பின் நேற்று உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

பண்டத்தரிப்பில் கடந்த திங்கட்கிழமை அதிகாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காசிப்பிள்ளை தங்கராசா (வயது45) என்பவரே இறந்தவராவார்.

கழுத்து, மார்புப்பகுதிகளில் இவருக்கு வெட்டுக்காயங்கள் காணப்பட்டன.

மரண விசாரணையின்போது சடலத்தை எரிக்காது புதைக்கும்படி உத்தரவிடப்பட்டது. மல்லாகம் நீதிமன்ற நீதிவானால் மரணவிசாரணை நடத்தப்பட்டது.

(இ-15-48)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி
சி.சிவநந்தினி அவர்களின்
அன்புத் தந்தையார்
**ஆறுமுகம் சின்னராசா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*20 ஆம் அணி, மருத்துவபீடம்,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

(76159)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன்
சி.சிவதாசன் அவர்களின்
அன்புத் தந்தையார்
**ஆறுமுகம் சின்னராசா**

16.05.2000 வவுனியாவில் காலமானார். அன்னாரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்தவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*18 ஆம் அணி மாணவர்கள்,*
*யாழ்.மருத்துவபீடம்.*

(76159)

## மரண அறிவித்தல்கள்

### நவரட்ணம் ரவிகரன்

உடுவில் மேற்கைச் சேர்ந்தவரும், களுவாஞ்சிக்குடி மட்டக்களப்பை வசிப்பிடமாகக் கொண்டவருமான நவரட்ணம் ரவிகரன் (15.05.2000) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் நவரட்ணம் - மகேஸ்வரி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் கீதாதேவியின் அன்புக் கணவரும் டினுஷனின் அன்புத் தந்தையும் நவரட்ணராஜா (ஜேர்மனி), பிரபாகரன் (லண்டன்), பாஸ்கரன்(பொலீஸ் வவுனியா), மனோகரன் (பொலீஸ்,வவுனியா), கிருபாகரன் (மஸ்கன்ஸ், கொழும்பு) ஆகியோரின் அன்புத் தம்பியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.நவரட்ணம்
(தந்தை)
(ஓய்வுபெற்ற பொலீஸ் சார்ஜன்ட்)

*உடுவில் மேற்கு,*
*சுன்னாகம்.*

(76158)

### ஆறுமுகம் சின்னராசா

இலகடி காரைநகரைப் பிறப்பிடமாகவும் குருமன்காடு, வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சின்னராசா நேற்று முன்தினம் (16.05.2000) வவுனியாவில் காலமானார்.

அன்னார் தில்லையம்பலம் ஆறுமுகம், காலஞ்சென்ற ஆறுமுகம் பகவதியின் அன்பு மகனும் சின்னராசா - கமலாதேவியின் அன்புக் கணவரும் குகதாசன் (இறுதியாண்டு யாழ்.மருத்துவபீடம்), சிவதாசன் (3ஆம் வருடம் யாழ்.மருத்துவபீடம்), சிவநந்தினி(2ஆம் வருடம், யாழ். மருத்துவபீடம்), சிவரஞ்சினி(3ஆம் வருடம் விஞ்ஞானபீடம், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கோபிதாவின் அன்பு மாமனாரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.குகதாசன்
(மகன்)

*ஆடியபாதம் வீதி,*
*திருநெல்வேலி*

(76163)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### திருட்டு எனும் பெருங் கேவலம்

"திருடனாகப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது" என்பார்கள்.

கொடும் போரின் பயங்கரத்தில் சிக்கித் திணறும் குடாநாட்டு மக்களை மேலும் அவலப்படுத்தும் ஒரு விடயமாக இன்று மாறிவருவது திருடர் தொல்லைகள்.

போரில் இடையில் சிக்கி அழியாமல் உயிரைக்காப்பதற்காக இடம்பெயரும் மக்கள், திருடர் தொல்லைகளால் மேலும் மேலும் கஷ்டப்படுகின்றார்கள்.

உயிரைக் காப்பதற்காக இடம்பெயர்ந்தால், விட்டுவிட்டுப் போகும் நம் உடைமைகளை தமதாக்கிக்கொள்ள கண்கொத்திப்பாம்பாக நம் மத்தியிலேயே காத்திருக்கும் ஒரு கூட்டத்தின் கொடுஞ்செயல் தாங்க முடியாததாகிவிட்டது.

போர் நடவடிக்கைகளில் தமது உடைமைகள் அழிந்துவிடும் என்பதிலும் பார்க்க, 'தோலிருக்க சுளை விழுங்கும்' நம் உள்ளூர்த் திருடர்களினால் உடைமையை இழந்துவிடுவோம் என்ற அச்சத்தில் தான் பெரும்பாலான நமது மக்கள் தங்களுடன் தாங்கமுடியாத தங்கள் சுமைகளையும் அள்ளிக்கொண்டு இடம்பெயர்கின்றார்கள் என்பதுதான் கவலைக்குரியது.

இந்தத் திருடர்கள் சமூகத்தில் கீழ் மட்டத்தில் இருக்கின்ற - திருட்டுத் தொழிலையே காலம் காலமாகச் செய்கின்ற - வழமையான திருடர்கள் தானா என்று பார்த்தால் நமக்கு வியப்புத்தான் ஏற்படும்.

'டிப்-டொப்' ஆக நம்மத்தியில் - சமூகத்தில் - பெரிதும் மதிக்கப்படுகின்ற பிரமுகர்கள் கூட இடம்பெயர்வைச் சாட்டாக வைத்து அடுத்தவன் பொருளை அபகரிக்கும் செயல்களை சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முந்திய வலிகாமம் இடம்பெயர்விலும் நாம் கண்டிருக்கின்றோம். அது இப்போதும் தொடர்வதாக தகவல்.

'பனையால் விழுந்தவனை மாடேறி மிதிக்கும் செயல்' போன்று போர் கொடூரத்தால் பாதிப்புறும் மக்களின் உடைமைகளைச் சூறையாடும் பண்பு அமைந்துள்ளது. இந்தப் பண்பையே ஒரு கலையாக வரித்துக்கொண்டு ஒரு சமூகம் வளர்வது கேவலத்திலும் கேவலமாகும்.

போர் நெருக்கடியும், தட்டிக் கேட்க ஆளில்லை என்ற மிதப்பும், அடுத்தவன் எக்கேடு கெட்டாலும் என்ன என்ற தனி மனிதப் போக்கும், சமூகத்தில் ஒழுங்கு, கட்டுப்பாட்டை கட்டாயம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற மனப்பாங்கு சமூகத்தில் குன்றிப் போனதும் இத்தகைய சமூக விரோதச் செயல்கள் வளர்ந்து விஸ்வரூபம் எடுத்து சமூகம் பெரும் நெருக்கடிகளைச் சந்திக்கும் போது அதனை அடியோடு சாய்க்கும் காரணிகளாகி விட்டன.

சமூகப் பொறுப்புணர்வு - சமூகக் கடப்பாடு - சமூகத்தின் அனைத்துத் தரப்பினராலும் உணரப்பட்டு, அனைவரும் கூட்டுமுயற்சி எடுப்பதன்மூலம் மட்டுமே சமூகத்துக்குப் பேரழிவு தரும் இத்தகைய தொற்று நோய்களை அடியோடு ஒழிக்க முடியும்.

தன் இனத்துக்குள்ளேயே இத்தகைய கொடூரச் செயல்களுக்கும், சுரண்டல்களுக்கும், அத்துமீறல்களுக்கும் இடமளிக்கும் ஓர் இனம், வெளியிலிருந்து வரும் அத்துமீறல்களுக்கு எதிராகக் கொதித்தெழுவது எங்ஙனம் நியாயம்? நாம் அனைவரும் நமக்குள் எழுப்பிக் கொள்ள வேண்டிய கேள்வி இது.

# புலிகள் - இலங்கை அரசு யுத்தமாக ஈழப்பிரச்சினையை அணுகவேண்டாம்

## மத்திய அரசிடம் வீரமணி கோரிக்கை

சென்னை,மே18

இலங்கையில் தற்போது நடக்கும் யுத்தத்தை புலிகளுக்கும் - அரசுப் படைகளுக்கும் இடையில் நடக்கும் உள்நாட்டு யுத்தமாகக் கருதாமல் பல்லாயிரக்கணக்கான ஈழத்தமிழர்களின் வாழ்வுரிமை என எண்ணி இந்தப் பிரச்சினையை இந்தியத் தலைவர்களும் தமிழகத் தலைவர்களும் இந்திய மத்திய அரசிடம் வலியுறுத்த வேண்டும்.

திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் கி.வீரமணி இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையில் இனங்களுக்கு இடையில் சுமுகமான நிலைமை ஒன்றை ஏற்படுத்த தமிழகத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் அயராது உழைக்க வேண்டும் எனவும் - அவர் கேட்டுள்ளார்.

(இ-7)

## தாக்குதல்

ஹராரே,மே18

சிம்பாப்வேயில் ஜனாதிபதி றொபேட் முகாபேயின் வேண்டுகோளையும் மீறி அங்குள்ள வெள்ளையின விவசாயிகள் மீதான வன்முறை அச்சுறுத்தல்கள் தொடர்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இரு பெரிய பண்ணைகளில் இருந்து வெள்ளையர்கள் அகதிகளாக அருகில் உள்ள நகரங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

இதேவேளை நில ஆணைக் குழு ஒன்றை நியமிக்கப்போவதாக ஜனாதிபதி முகாபே அறிவித்துள்ளார்.

இந்த அறிவித்தலை வெள்ளையின விவசாயிகள் வரவேற்றுள்ளனர். (இ-ஒ)

## கச்சதீவைத் தமிழக மீனவரும் பயன்படுத்த உரிமை வேண்டும்

### இந்திய அரசிடம் கோரிக்கை

சென்னை,மே18

கச்சதீவுப் பகுதியில் இறால் பிடிக்கும் உரிமையை தமிழக மீனவர்களுக்கு இலங்கை அரசிடம் இருந்து மத்திய அரசு பெற்றுத்தர வேண்டும் என்று தமிழ்நாடு மற்றும் புதுவை மீனவர்கள் சங்கக் கூட்டமைப்பின் செயலர் என்.ஜே.போஸ் விடுத்துள்ள அறிக்கையில் கோரியுள்ளார்.

அந்த அறிக்கையில் -

இராமேஸ்வரம் மீனவர்களின் படகுகளைத் தாக்குவதற்காக அவற்றை விடுதலைப்புலிகள் பயன்படுத்துவதாகப் பொய்க் குற்றச்சாட்டு கூறப்படுகின்றது - என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் -

1983 ஆம் ஆண்டிலிருந்து 300 தமிழக மீனவர்கள் இந்த எல்லையில் கொல்லப்பட்டுள்ளனர்; ஆயிரம்பேர் வரை தாக்குதல்களில் காயமடைந்துள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

இலங்கைப் பகுதியில் அதிக மீன்கள் கிடைப்பதாலேயே தமிழக மீனவர்கள் அந்நாட்டுக் கடற்பகுதிக்குச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுவதாகவும் என்.ஜே. போஸ் தெரிவித்துள்ளார்.

(உ-ஒ-4-9)

## எதியோப்பிய அத்துமீறல்: எரித்திரியா குற்றச்சாட்டு

லண்டன்,மே18

எதியோப்பியப் படைகள் தனது நாட்டு எல்லைக்குள் அத்துமீறி நுழைந்துள்ளதாக எரித்திரியா குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்த ஆக்கிரமிப்புக்கு எதிராக ஐ.நா.சபை தலையிடவேண்டும் என்று எரித்திரியா கேட்டுக்கொண்டுள்ளது.

இது குறித்து எரித்திய ஜனாதிபதி அலுவலகப் பேச்சாளர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் எதியோப்பியாவின் இத்தகைய அத்துமீறல்களுக்கு எரித்திரியப் படைகள் தகுந்த பதிலடி கொடுக்கத் தயாராக உள்ளன என்று தெரிவித்துள்ளார்.

இதேசமயம் இரு நாடுகளின் எல்லைப் பகுதியில் கடந்த ஐந்து நாள்களாக நடைபெற்றுவரும் மோதல்களில் பலத்த உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன என்று வெளிநாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்றின் செய்தியாளர் கூறினார். (இ-ஒ-4-9)

## உலக அரங்கில்

### மேற்குக்கரை, காஸா தொடர்பாக

## இஸ்ரேல்-பலஸ்தீனம் இரகசியமாகப் பேச்சு

ஜெருசலேம்,மே18

மேற்குக்கரைப் பிரதேசம் மற்றும் காஸா நிலப்பகுதி ஆகியன தொடர்பாக ஒரு நிரந்தரத் தீர்வைக் காண்பதற்காக இஸ்ரேலும் பலஸ்தீனமும் இரகசியப் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளன.

ஹெப்ரோனில் உள்ள பெயர் குறிப்பிடப்படாத இடம் ஒன்றில் இந்தப் பேச்சுக்கள் இடம்பெற்று வருவதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேற்குக் கரை மற்றும் காஸா நிலப்பகுதிகளை பலஸ்தீனத்திடம் மீண்டும் ஒப்படைப்பது -

அப்பகுதிகளை விட்டு இஸ்ரேலியப் படைகளை விலக்கிக் கொண்டால் அங்கு வசிக்கும் இஸ்ரேலியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது - ஆகிய விடயங்கள் தொடர்பாக இந்தப் பேச்சுக்களின் போது ஆராயப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தப் பேச்சுக்களின் போது பல சிரமங்கள் ஏற்படக்கூடும். ஆனால் மாற்று நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பாக இந்தப் பேச்சுக்கள் இரு தரப்பையும் முன்னெடுத்துச் செல்லும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - பலஸ்தீனர்களுடன் உடன்பாடு செய்துகொள்ளத் தான் உத்தேசித்துள்ளதாகவும் -

தற்போதைய பேச்சுக்கள் தொடர்பான விவரம் தொடர்ந்தும் இரகசியமாகவே வைத்திருக்கப்படும் என்றும் - இஸ்ரேலியப் பிரதமர் எஹுட் பராக் சொன்னார்.

(இ-6)

## கொமாண்டோக்களை அனுப்பி பிரபாகரனைக் கைதுசெய்க!

### சுப்பிரமணியம் சுவாமி கோரிக்கை

சென்னை,மே18

யாழ்ப்பாணத்துக்கு இந்தியாவின் 'கொமாண்டோ'படைகளை அனுப்பி விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனையும் பொட்டு அம்மானையும் கைது செய்ய வேண்டும்.

இவ்வாறு ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி இந்திய மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி படுகொலை வழக்கில் பிரபாகரனும் பொட்டு அம்மானும் குற்றவாளிகளாக காணப்பட்டவர்கள் என்றும்-

விடுதலைப் புலிகள் அமைப்புடன் இந்திய அரசாங்கம் பேச்சுக்களை நடத்தக் கூடாது என்றும்- அவர் கேட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தியாவுக்குக் கூட தற்போது பெரும்அச்சுறுத்தலாக மாறியுள்ளது என்றும்-

இந்தியாவில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படும் அரசியல் கட்சிகள் அனைத்தையும் தடை செய்ய வேண்டும் என்றும் அவர் மேலும் கோரியுள்ளார்.

(இ-9)

## சமாதான முயற்சியில் மீண்டும் அமெரிக்கா

வாஷிங்டன்,மே18

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையே சமாதான உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்தும் முயற்சியில் அமெரிக்கா மீண்டும் இறங்கியுள்ளது.

சமாதான முயற்சியை அமெரிக்கத் தூதுவர் டெனிஸ் ரொட்ஸ் மேற்கொள்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சமீப காலங்களில் நிகழ்ந்து வரும் பல்வேறு வன்முறைச் சம்பவங்களை அடுத்து அமெரிக்கா இந்தச் சமாதான முயற்சியில் இறங்கியுள்ளது.

மேற்படி அமைதி முயற்சியில் ஓர் அங்கமாக பலஸ்தீன தலைவர் யசீர் அரபாத்தை அமெரிக்கத் தூதர் ரொட்ஸ் மேற்குக்கரை நகரான ரமலாவில் சந்தித்துப் பேசினார்.

அப்போது ரொட்ஸ் 'சாதகமான சூழலை ஏற்படுத்த இருதரப்பும் பொறுமையை கடைப்பிடிக்க வேண்டும்' என அரபாத்திடம் வலியுறுத்தியதாகக் கூறப்படுகிறது.

அடுத்து இஸ்ரேலியப் பிரதமர் எஹுட் பராக்கையும் அமெரிக்கத் தூதர் சந்திப்பார் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இஸ்ரேல் படையினர் நிலைகொண்டுள்ள பகுதிகளில் பலஸ்தீனக் கெரில்லாக்கள் நடத்திய தாக்குதல்களும் இதனைத் தொடர்ந்து இஸ்ரேல் தென் லெபனானின் மீது வான் தாக்குதலை மேற்கொண்டதும் இரு நாடுகளுக்கிடையேயான சமாதான முயற்சிகளை பின் தள்ளியிருந்தது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் கடந்த ஒருவார காலமாக இஸ்ரேல் படைகளுக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையே ஏற்பட்டுள்ள வன்முறை மோதல்கள் மேற்குக்கரைப் பிராந்தியத்தின் அமைதி முயற்சியை கேள்விக் குறியாக்கியிருந்தது. (இ-ஒ-4-9)

## சுப்பிரமணிய சுவாமியை கைதுசெய்ய பிடியாணை

சென்னை,மே18

தமிழகத்தின் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்திய வழக்கில் ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமியை கைது செய்வதற்கான பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை கூடுதல் மாவட்ட நீதிமன்றம் இந்த ஆணையைப் பிறப்பித்துள்ளது.

1995 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் சுப்பிரமணிய சுவாமி உரையாற்றியபோது ஜெயலலிதாவின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தத் தூண்டும் வகையில் பேசியதாக இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இந்த வழக்கை அ.தி.மு.கவைச் சேர்ந்த ஒருவர் தாக்கல் செய்திருப்பதாக காவல்துறையினர் தெரிவித்தனர். (உ-ஒ-4-9)

## பாகிஸ்தானில்

## தீவிரவாதத்தில் ஈடுபடுவதாக மதரஸாக்கள் மீது குற்றச்சாட்டு

இஸ்லாமாபாத்,மே18

பாகிஸ்தானில் உள்ள'மதரஸாக்கள்' எனப்படும் இஸ்லாமியப் பள்ளிகள் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக இஸ்லாமாபாத்தில் இருந்து வரும்செய்திகள் தெரிவிக்கின்றன.

சுமார் 126 மதரஸாக்கள் தீவிரவாதக்குழுக்களோடு தொடர்பு வைத்திருப்பதாகவும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்துடன் மேற்படி மதரஸா பள்ளிகள் தமது மாணவர்களை ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பி அவர்களுக்குப் போர்ப்பயிற்சி அளித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானில் இஸ்லாமியப் பிரிவுகளுக்கு இடையேயான வன்முறை மோதல்கள் அதிகரித்து வருவதனால் அந்நாட்டு அரசு தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## 200 பணயக் கைதிகள் பிலிப்பைன்ஸில் மீட்பு

மணிலா,மே18

பிலிப்பைன்ஸில் இஸ்லாமியத் தீவிரவாதிகளினால் பணயக் கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டிருந்த சுமார் 200 பொதுமக்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினர் மேற்கொண்ட கடும் தாக்குதல் நடவடிக்கைகளினாலேயே தீவிரவாதிகள் பணயக் கைதிகளைக் கைவிட்டு தப்பியோடி விட்டதாக பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தீவிரவாதிகள் தங்கியிருந்த பிரதேசத்தை தற்போது படையினர் ஆக்கிரமித்துள்ளனர் என்றும் விடுவிக்கப்பட்டவர்கள் அனைவரும் பாதுகாப்பாக உள்ளதாகவும் அந்த இராணுவ அதிகாரி மேலும் கூறினார்.

வெவ்வேறு தீவிரவாதக் குழுக்களினால் பிலிப்பைன்ஸின் பல இடங்களில் பிடிக்கப்பட்டுள்ள பிணைக் கைதிகளை மீட்கும் இராணுவ நடவடிக்கைகள் தொடரும் என்று கூறப்படுகிறது.

(இ-ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் தீர்வு யோசனைகளை சிறிய சம்பவமும் பாதிக்கின்றது

## அமைச்சர் பீரிஸ் கூறுகின்றார்

"இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசினால் முன்வைக்கப்படும் யோசனைகள் தொடர்பான மக்களின் கருத்து ஏதேனும் ஒரு சிறிய சம்பவம் காரணமாகவும் மாற்றமடைகின்றது."

'தேசிய ஒருமைப்பாடு' என்ற தலைப்பிலான ஊடகவியலாளர்களின் இருநாள் கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றிய அமைச்சர் ஜி.எல். பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாக்கிர் மாக்கர் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த இந்தக் கருத்தரங்கில் அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில்-

"அரசாங்கத்தின் தீர்வுத்திட்டத்துக்குப் பொதுமக்களின் பெருமளவு ஆதரவு கிடைக்கும் என ஆய்வுகள் மூலம் தெரியவந்ததை அடுத்து அந்த விடயம் தொடர்பாகச் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த முடிவு செய்யப்பட்டது. எனினும் தலதா மாளிகை தாக்கப்பட்ட சம்பவம் வாக்கெடுப்பு நடத்தினால் அதனைப் பாதிக்கும் என்ற நிலையை ஏற்படுத்தியது.

"அரசாங்கம் முன்வைத்துள்ள தீர்வு யோசனைகளுக்கு எதிரான கருத்தைக் கொண்டிருக்கும் வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் சில அந்தச் சூழ்நிலையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டன" - என்று தெரிவித்தார்.

# தீர்வு காண்பதை தாமதிக்க புலிகளுக்கு ஆதரவு பெருகும்

## வரதராஜப்பெருமாள் கூறுகின்றார்

கொழும்பு,மே18

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் விவகாரத்தை அரசு இழுத்தடித்துக் கொண்டிருப்பதால், விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு பெருகிவருகிறது என்று வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாள் தெரிவித்தார்.

தற்போதைய யுத்தநிலைமையை விளக்குவதற்காக ஜனாதிபதி ஏற்பாடு செய்த அரசியல் கட்சிகளுக்கான கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நோயாளிதான் வைத்தியரைத் தேடிப் போகவேண்டும். வைத்தியர் நோயாளியைத் தேடி வருவதில்லை. எனவே இந்தியாவை நாம்தான் தேடிப்போக வேண்டும். அவர்கள் வருவார்கள் என்று காத்திருக்கத் தேவையில்லை.

அரசு முன்வைத்துள்ள தீர்வு யோசனைகளை நிறைவேற்றும் காலத்தை இழுத்தடிக்க புலிகளுக்கான ஆதரவு அதிகரித்துக் கொண்டேபோகும்.

ஆனையிறவில் விடுதலைப் புலிகள் வெற்றியடைந்ததை அடுத்து புலிகளுக்கு உதவிகள் வந்து குவிந்தவண்ணம் உள்ளன - என்றார். (ஐ-3)

### ப.நோ.கூ. சங்கங்களில்

# இரு மாதங்களுக்கான உணவை கையிருப்பில் வைத்திருக்க முடிவு!

யாழ்ப்பாணம்,மே18

தற்போதைய நிலையில் சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் இரு மாதங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களைக் கையிருப்பில் வைத்திருக்கவேண்டும் என்று நேற்று நல்லூர்ப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற அரச திணைக்களத் தலைவர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

யாழ். அரச அதிபர் க.சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் விவரம் வருமாறு:-

* தீவுப் பகுதிகளில் உள்ள ப.நோ.கூ. சங்கங்களில் மூன்று மாதங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களைக் கையிருப்பில் வைத்திருத்தல்.

* சாவகச்சேரிப் பகுதிக்கு இரண்டு லொறிலோட் சீனியும், இரண்டு லொறிலோட் மாவும் உடனடியாக அனுப்பிவைத்தல்.

* தற்பொழுது கொழும்பில் ப.நோ.கூ. சங்கங்களுக்குப் பொருள்களை ஏற்றிக் கொண்டிருக்கும் கப்பலில் வரும் பொருள்களை ப.நோ.கூ. சங்கங்கள் கொள்வனவு செய்ய வேண் டும்.

* யாழ்ப்பாணம், சாவகச்சேரிப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்துள்ளவர்களில் குடாநாட்டின்பல இடங்களிலுமுள்ள ஆலயங்கள், பாடசாலைகளில் தங்கியிருக்கும் 1,500 குடும்பங்கள் பற்றிய விவரங்கள் மட்டுமே சேகரிக்கப்பட்டுள்ளன. உறவினர்கள், நண்பர்களின் வீடுகளில் தங்கியுள்ளவர்களின் முழு விவரமும் சேகரிக்கப்பட வேண்டும்.

* விவசாயிகளுக்கான மண்ணெண்ணெய் விநியோகம் இது வரையும் நடைபெறாமையால் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் தொடர்பு கொண்டு இந்த விநியோகத்தினைச் சீராக்குவது.

* தபாலகங்களில் முத்திரைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் தபால் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு முத்திரைகளைத் தருவித்தல் வேண்டும்.(ஐ-5)

### புனர்வாழ்வு ஊழியர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,மே18

யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவு, வேலணைப் பிரதேச செயலகம் மற்றும் யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் ஆகியவற்றில் கடமையாற்றும் ஊழியர்களை நாளை வெள்ளிக்கிழமை காலை ஊரடங்குச்சட்டதளர்வின் போது கடமைக்குச் சமுகமளிக்குமாறு மேற்படி திணைக்களத் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

புனர்வாழ்வுப் பிரிவு ஊழியர்களை கோண்டாவிலிலுள்ள செயலகக் களஞ்சியத்துக்கு சமுகமளிக்குமாறு திட்டப்பணிப்பாளர் செ.மகாலிங்கம் கேட்டுள்ளார். (இ-5)

# கரவெட்டி தெற்குக்கான நீர் விநியோகம் பாதிப்பு

யாழ்ப்பாணம்,மே18

கரவெட்டி தெற்கில் வசிக்கும் மக்களுக்கு குழாய் மூலம் வழங்கப்பட்டுவந்த குடிதண்ணீர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளதால் இப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

அத்துளு தண்ணீர்த் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுவந்த குடி தண்ணீர் விநியோகமே நிறுத்தப் பட்டிருக்கிறது.

இதற்கு ஆவன செய்யுமாறு கரவெட்டி திருவள்ளுவர் சனசமூக நிலையத்தினர் கரவெட்டி உதவி அரச அதிபரிடம் கோரியுள்ளனர். (ஐ-4)

# சில தொண்டு நிறுவனங்களின் பணிகள் இடம்மாற்றம்

யாழ்ப்பாணம்,மே18

யாழ். நகரப் பகுதியில் இயங்கிவந்த சில சர்வதேசத் தொண்டு நிறுவனங்கள் தமது அலுவலகப் பணிகளின் சில பிரிவுகளை இடம் மாற்றம் செய்து வருவதாகத் தெரியவருகிறது.

யாழ்.கண்டிவீதியில் இயங்கிவந்த ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் தனது பணிகளை கோயில் வீதியில் உள்ள அலுவலகத்துக்கும் - 'கெயர்' நிறுவனம் தனது சில பணிகளை பருத்தித்துறைக்கும் - மாற்றியுள்ளன.

'போரூட்' அமைப்பு கோயில் வீதியில் இயங்கிய தமது அலுவலகத்தை சித்தன்கேணிக்கு தற்காலிகமாக இடம்மாற்றம் செய்துள்ளது.

இடம்பெயரும் மக்களுக்கான பணிகளை மேற்கொள்வதற்கு வசதியாகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அந்த அமைப்பின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

### இடம்பெயர்ந்தோர் தங்கியுள்ள

# வலி. மேற்குப் பகுதிகளில் பாணுக்குப் பலத்த தட்டுப்பாடு

யாழ்ப்பாணம்,மே18

வலிகாமம் மேற்குப் பகுதியில் பாணுக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

யாழ்.மாநகரசபைப் பகுதியில் இருந்தும் அதனைச் சூழ்ந்த பகுதிகளிலும் இருந்தும் இடம்பெயர்ந்து மானிப்பாய், சங்கானை, சண்டிலிப்பாய் மற்றும் வட்டுக்கோட்டை, சித்தன்கேணி, உடுவில் பகுதிகளில் தங்கியுள்ள மக்கள் இதனால் பெரும் பாதிப்பை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வலிகாமம் பகுதியில் உள்ள பேக்கரிகளுக்கு முன்னால் அதிகாலை வேளையில் பொதுமக்கள் பலரும் நீண்டவரிசையில் நிற்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

பேக்கரிகளுக்குப்போதிய அளவுமா வழங்கப்படாமையே பாணுக்குத் தட்டுப்பாடு ஏற்படக் காரணம் எனக் கூறப்படுகிறது. (ஐ-7-139)

### ஊரடங்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர்களுடன் தொடர்புகொண்டு இதற்கான அனுமதியைப் பெறவேண்டும்.

யாழ். செயலகப் பணிகள் தொடர்ந்தும் நடைபெறும். எவ்வித காரணங்களுக்காகவும் செயலகம் வேறு இடத்துக்கு மாற்றப்படமாட்டாது. மக்கள் தொடர்ந்தும் இடம் பெயர்ந்து கொண்டிருப்பதால் அவர்கள் தங்கியுள்ள இடங்களுக்கு நேரில் சென்று கிராமசேவை உத்தியோகத்தர்கள் அவர்களைப் பதிவு செய்யவேண்டும்.

இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் இடங்களில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமே அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படவேண்டும்.

தற்போதைய நெருக்கடி நிலையைச் சாதகமாக்கி மக்களின் சொத்தான ப.நோ.கூ. சங்கங்கள் மற்றும் உணவுக்களஞ்சியங்கள் உடைக்கப்பட்டு பொருள்கள் சூறையாடப்படுகின்றன.

ப.நோ.கூ. சங்கங்களில் உள்ள பொருள்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அந்தப் பகுதியில் உள்ள பொதுமக்களையே சார்ந்ததாகும். இந்தச் சங்கங்கள் பாதுகாக்கப்படாது விட்டால் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் பொருள்களைப் பெற முடியாத நிலை உருவாகிவிடும்.

ப.நோ.கூ.சங்கங்கள் மக்களுக்குத் தேவையான பொருள்களை விநியோகம் செய்தால் மக்கள் அதிகரித்த விலையில் பொருள்களைப் பெறவேண்டியிருக்காது. மக்களுக்கு விநியோகம் செய்வதற்காகவே ப.நோ. கூ. சங்கங்களுக்கு மா வழங்கப்பட்டுள்ளது. எனவே எந்தவித காரணம் கொண்டும் தனியார் கடைகளுக்கோ பேக்கரிகளுக்கோ ப.நோ.கூ.சங்கங்கள் மா விநியோகம் செய்யக்கூடாது.

பேக்கரி உரிமையாளர்கள், பேக்கரி உரிமையாளர் சங்கத்திடம் இருந்து மட்டுமே மாவைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (ஐ-5)

### பிரபாவின் தாயார் சுகவீனம்

லண்டன்,மே18

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனின் தாயாரான திருமதி பார்வதி வேலுப்பிள்ளை(வயது70) பாரிசவாத நோயினால் தாக்குண்டு திருச்சி மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

சித்த மருத்துவரான டாக்டர் ராஜேந்தர் அவருக்குச் சிகிச்சை அளித்துவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வேலுப்பிள்ளை தம்பதியர் 1980ஆம் ஆண்டு முதல் திருச்சியில் வாழ்ந்துவருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-9)

### உறவினரைத் தேடும் சிறுவன்

யாழ்ப்பாணம்,மே18

கொழும்புத்துறை சந்தன மாதா கோயிலடியிலிருந்து இடம்பெயர்ந்த சமயம் உறவினர்களால் தவறவிடப்பட்ட வசந்தன் (வயது14) என்ற சிறுவன் நல்லூர் முடமாவடிச் சந்தியிலுள்ள தொலைத்தொடர்பு நிலையத்தில் தங்கியுள்ளார் என்றும் -

மரியபாக்கியம் எனப்படும் தனது அம்மம்மாவை இச்சிறுவன் தேடுவதாகவும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் பளை, சோரன்பற்று பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து கொழும்புத்துறைப் பகுதியில் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

### கைதடி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலத்த இழப்பு ஏற்பட்டுள்ளது [illegible] குழிக் காப்பரண் ஒன்றிலிருந்த 9 புலிகள் கொல்லப்பட்டனர். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 5 கிரகங்களுடன் சூரியன் - சந்திரன் நேர்கோட்டில்

கொழும்பு,மே18

நேற்று அதிகாலை கிழக்கு வானில் ஐந்து கிரகங்களுடன் சூரியன் மற்றும் சந்திரன் ஆகியன ஒரே நேர்கோட்டில் தோன்றி அதிசய ஒளிப்பிளம்பாகக் காட்சியளித்தன.

காலை 7.10 மணிக்கு சந்திரன் போன்ற வட்ட வடிவான ஒளிப்பிளம்பு வானில் தோன்றி சுமார் அரைமணி நேரம் நிலைத்து நின்றது. வானவெளியில் இத்தகைய ஓர் அதிசய நிகழ்வு ஏற்படும் எனவும் அதனைப் பூமியில் இருந்து பார்க்க முடியும் என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்திருந்தது தெரிந்ததே. (இ-9)

### போலியோ தடுப்பு மருந்து

யாழ்ப்பாணம்,மே18

தொண்டமானாறு வீரகத்தி மகா வித்தியாலய மாணவர்களுக்குப் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ஊழியர்களினால் நாளை வெள்ளியன்று போலியோ தடை மருந்து வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை வல்வை மகளிர் வித்தியாலயத்தில் போலியோ தடுப்பு மருந்து வழங்கப் படவுள்ளது. (இ-5-109)

### மேற்றிராணியார் கோரிக்கை

கொழும்பு,மே18

நாட்டின் ஒருமைப்பாட்டை நிலை நிறுத்துவதற்காக சண்டையிட்டு வரும் படையினருக்கு இரத்ததானம் செய்யுமாறு கொழும்பு கத்தோலிக்கர்களிடம் அதிமேற்றிராணியார் நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டின் ஒருமைப்பாட்டை நிலை நிறுத்துவதற்காக சண்டையிடும் படையினருக்கு கத்தோலிக்கர்கள் உதவவேண்டும். படையினருக்கு இரத்ததானம் செய்ய முன்வர வேண்டும். இதனை விடுதலைப் புலிகளுக்கு எதிரான செயலாகக் கருதக்கூடாது. இது பயங்கரவாதத்துக்கு எதிரானதே - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் [illegible] களின்போது தேவாலயங்களில் சேரும் [illegible] படையினரின் சேமநலன்களுக்கு வழங்கும்படியும் அவர்கேட்டுக்கொண்டார். (ஐ-7-9)

# இந்திய மத்தியஸ்தத்துக்கான வாய்ப்பை ஆராய்வதற்குக் குழு

## ஐ.தே.க. கூட்டிய மாநாட்டில் முடிவு

கொழும்பு,மே18

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியா மத்தியஸ்தம் வகிக்கத் தயார் எனத்தெரிவித்துள்ள விவகாரத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வது குறித்து ஆராய்ந்து முடிவுகளை எடுப்பதற்காக ஐ.தே.கவினால் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாட்டில் இதற்காக விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

இந்தியாவின் விருப்பம் தொடர்பான விவகாரத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகள் குறித்து ஆராய ஐ.தே.க. சர்வகட்சி மாநாடு ஒன்றை கடந்த திங்களன்று நாடாளுமன்றக் கட்டடத்தில் கூட்டியது.

அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுடன் தொழிற்சங்கவாதிகள், பத்திரிகையாளர்கள் எனப் பலரும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இது விடயமாக இந்தியாவுடன் கலந்துரையாடி நடவடிக்கைகளை மேற்கொள்ள சர்வகட்சிப் பிரதிநிதிகளும் அங்கம் வகிக்கும் குழு ஒன்று இக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டது. (உ-3)

# பொதுப் பாதுகாப்புச் சட்ட விதிகள் பொதுமக்களைத் துன்புறுத்த அல்ல

## ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு,மே18

அரசினால் அமுல் செய்யப்பட்டுள்ள பொதுப் பாதுகாப்புச் சட்ட விதிகள் பொதுமக்களையோ அல்லது தொழிற்சங்கத்தினரையோ துன்புறுத்தும் வகையில் பயன்படுத்தப் படமாட்டாது என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டே அரசாங்கம் பொதுப் பாதுகாப்புச் சட்ட விதிகளை அமுல்படுத்தியது.

இந்தச் சட்டவிதிகளின் மூலம் பொதுமக்களை ஒடுக்கும் நோக்கம் அரசாங்கத்துக்குக் கிடையாது. சட்ட விதிகளின் பிரகாரம் அளிக்கப்பட்ட அதிகாரங்கள் எந்த வகையிலும் துஷ்பிரயோகம் செய்யப்படமாட்டாது.

அத்துடன் தற்போதைய பத்திரிகைத் தணிக்கை விரைவில் நீக்கப்படும்.

இப்படி ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

### விவரம் சமர்ப்பிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே18

இடம்பெயர்ந்து தமது பகுதியில் தங்கியுள்ளவர்களின் விவரத்தைச் சமர்ப்பிக்குமாறு கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் கடமையாற்றும் சகல கிராம சேவை உத்தியோகத்தர்களையும் கோப்பாய் பிரதேச செயலர் எஸ்.கேதீஸ்வரன் கேட்டுள்ளார்.

பிரதேச செயலகத்துக்கு நாளை காலை நேரில்வந்து மேற்படி விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18-05-2000இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.